**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.02.2026**
**OS. No. 190/2023**
**வழக்கு சாட்சி PW.1– முத்துகண்ணன், த/பெ.ஆறுமுக கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு, எங்களுக்கு வழங்கப்பட்டதாகும். அதில் பிரதிவாதிகள் தொந்தரவு செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகளும், நாங்களும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவோம். என் தந்தை பெயர் ஆறுமுக கவுண்டர், அவருக்கு குப்பாயம்மாள் மற்றும் ஆராயம்மாள் என இரு மனைவிகள் இருந்தனர். எங்கள் தாயார் பெயர் ஆராயம்மாள் ஆகும். எங்கள் தந்தை 1987 ல் இறந்துவிட்டார். தாவா சொத்துக்கள் மற்றும் பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் எங்கள் பூர்வீக சொத்து ஆகும். தாவா சொத்து நங்கவள்ளி கிராமம் ச.எண்.127 ல் உள்ளது. எங்கள் தந்தை இறந்தபிறகு தான் 1997 ல் பாகம் பிரித்து கொண்டோம்.

2) 16.09.2023 ம் தேதியில் பிரதிவாதிகளிடம் மீண்டும் பாகபிரிவினை குறித்து ஏதேனும் பேசினேனா என்றால் இல்லை. வேறு ஏதேனும் வழக்கு எங்களுக்குள் நிலுவையிலுள்ளதா என்றால் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் பாகம் பிரிக்கவில்லை என்று கூறி தாக்கல் செய்த வழக்கு நிலுவையிலுள்ளது, அதன் வழக்கு எண் எனக்கு நினைவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 10.03.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.